# பெற்றோர் பாதி...... ஆசிரியர் பாதி..... குழந்தைக்கு எங்கே நீதி?

அன்பார்ந்த பெற்றோர் பெருமக்களுக்கு......

சமீபத்தில் அயனாவரத்தில் நடந்த 'பெண் கொடுமை' குறித்து, கீழ்க்கண்ட தகவல்களை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

## எதனால் இத்தகைய கொடுமைகள் நிகழ்கின்றன?

- குழந்தைப் பருவத்தில் நிகழும் உடல் ரீதியான மாற்றங்களைப் பற்றி பெற்றோரும், ஆசிரியரும் அவ்வப்போது விளக்கத் தவறுதல்.
- தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என யார் யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் மற்றும் அவர்களின் பேச்சுக்கள், செயல்கள் குறித்து குழந்தைகளுக்கு போதிய விழிப்புணர்வு இல்லாமை.
- சிறு, சிறு கசப்பான அனுபவங்களை பிறர் ஏற்படுத்தும்போது, அதைப்பற்றி குழந்தைகள் பெற்றோரிடமும், ஆசிரியரிடமும் பகிர்ந்து கொள்ள பயப்படுதல்.
- குழந்தைகள் ஏதாவது பேச முற்படும்போது "உனக்கு ஒன்றும் தெரியாது, வாயை மூடு" என்று காலம் காலமாக பெற்றோரும், ஆசிரியரும் குழந்தைகளின் வாயை மட்டுமல்ல, மனதையும் மூடிவிடுதல்.
- குழந்தைகளின்பால் பெற்றோர்களின் வரையறையற்ற கனவுகள், எதிர்பார்ப்புகள் - குழந்தைகளுக்கு இதனால் ஏற்படும் மன அழுத்தம் மற்றும் விபரீத எண்ணங்கள்.
- உண்மையான, ஆபத்தான நிகழ்வை குழந்தைகள் பகிர்ந்துகொள்ள வரும்போது "இதையெல்லாம் பெரிதுபடுத்தாதே, நீ தேவை இல்லாமல் பயப்படுகிறாய்" என்று பாராமுகமாக நாம் இருத்தல்.
- பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளுக்கு அளிக்கப்படும் அதிக சுதந்திரம், இதனால் பெண் பிள்ளைகளுக்கு ஏற்படும் தாழ்வு மனப்பான்மை.

## இது போன்ற கொடுமைகளை அறவே தடுப்பது எப்படி?



- தினமும் பத்து நிமிடங்களாவது நம்மிடம் குழந்தைகள் மனம் விட்டுப் பேச நேரம் ஒதுக்குதல். "இன்று பள்ளியில் என்ன நடந்தது?", "வரும் வழியில் ஏதாவது பிரச்சனையா?", "இன்று நீ ஏன் சோர்வாகத் தெரிகிறாய்?" போன்ற கேள்விகளைப் பாசமுடன் கேட்டு, விளக்கம் பெறுதல்.
- எந்த நேரமும் நாம் மட்டும் பேசி அவர்களைக் கேட்கச் சொல்லும் பழம் பெரும் பழக்கத்தை விட்டொழிப்போம். இனி அவர்களும் பேசி, நாமும் கேட்போம் என்ற நிலையை இல்லங்களில் உருவாக்குதல்.
- குழந்தைகள் சிறு, சிறு நல்லதைச் செய்தால் கூட, "சூப்பர்", "வெரிகுட்", "இன்னும் முயற்சி செய்தால் இதைவிட சூப்பராக நீ வருவாய்" போன்ற வார்த்தைகளைப் பேசி, அவர்களை நம்மிடம் நெருங்கி வரச் செய்து அதன்மூலம் அவர்கள் நம்மிடம் எல்லா அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளச் செய்தல்.
- குழந்தைப்பருவத்தில் அவர்கள் செய்யும் தவறுகளை கனிவான-புத்திசாலித்தனமான வார்த்தைகளால் மட்டுமே திருத்த முடியும் என உணர்ந்து கொள்ளுதல்.
- குரலை உயர்த்தி, பயமுறுத்தி, தண்டிக்கும் போக்கு நமக்கும், குழந்தைகளுக்கும் இடையே தூரத்தை உண்டாக்கி அந்த தூரமே பல விபரீதங்களுக்குக் காரணமாகிறது என உணர்ந்து செயல்படுதல்.
- படிப்போ, திறமையோ, அவர்களால் என்ன முடியுமோ அந்த அளவுக்குத்தான் குழந்தைகள் சாதிப்பார்கள். நம் கனவுகளும், எதிர்பார்ப்புகளும் அவர்களின் மன அழுத்தத்திற்கு காரணமாகி அது அவர்களை வேறு திசையில் கொண்டு போய் சேர்க்கும் என புரிந்து செயல்படுதல்.
- இன்றைய ஆண் குழந்தைகள் நாளைய ஆண்கள். தன் சகோதரியை மதித்தல், சகோதரிக்கும் சம உரிமை உண்டு எனப் புரிய வைத்தல், கொஞ்சம் இறை நம்பிக்கை , சொல்லாலும் - செயலாலும் பிறரை துன்புறுத்துதல் கூடாது என்ற கொள்கை சார்ந்த வாழ்க்கையை வாழுதல் என ஆண் பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே ஒரு நல்ல பாதையை ஏற்படுத்துதல்.
- 'என் உடல், என் உரிமை' என குழந்தைகளுக்குப் புரிய வைத்தல், எது பாதுகாப்பான தொடுதல், எது குழப்பமான தொடுதல், எது பாதுகாப்பற்ற தொடுதல் என பெண் பிள்ளைகளுக்கு அம்மாக்கள் தொடர்ந்து சொல்லித் தருதல்.

**குழந்தைகள் எதிர்காலத்தில் எந்த அச்சுறுத்தலும் இன்றி மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் வாழத் தேவையான விழிப்புணர்வை தொடர்ந்து நம் பள்ளி நிர்வாகம் ஏற்படுத்தும் என்று இத்தருணத்தில் உறுதி கூறுகிறோம்.**

## EVERWIN GROUP OF SCHOOLS

**KOLATHUR • MADURAVOYAL • MATHUR • PERAMBUR**